1973 மார்ச் 26]

Metropolitan Transport Team of the Planning Commission

* 264 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether any rapid transit system between Tiruvanmiyur and Ennore has been under examination by the Metropolitan Transport Team of the Planning Commission; and

(*b*) if so, the details thereof?

திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துச் சிறுகுழு

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவான்மியூருக்கும் எண்ணூருக்கும் இடையில் விரைவுப் போக்குவரத்து ஏற்பாடு ஏதேனும் திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துத் ஆணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகர்ப் போக்குவரத்துக் குழு, "சென்னை பெருநகர் பகுதி போக்குவரத்து வழிகள்—1991" என்னும் தனது அறிக்கையில் பெருமளவு போக்குவரத்து ஏற்பாட்டுக்கான வடக்கு, தென்கிழக்கு இடை வழி குறித்து தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் ரயில்வே அமைச்சகம் திருவொற்றியூரையும், திருவான்மியூரையும் இணைக்கும் வடக்கு-தென் கிழக்கு இடைவழி நெடுக சென்னை மாநகரில் விரைவுப் போக்குவரத்து தொழில் நுட்ப-பொருளாதார ஏற்புடைமை ஆய்வை மேற்கொண்டுள்ளது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, மகாபலிபுரம் வரை இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலிலே திருவொற்றியூரையும், திருவான்மியூரையும் இணைக்கிற அளவிற்குப் பாதாள ரயில் பாதையை அமைப்பதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு, அதிலே முயற்சி செய்வோமானால், பிறகு வேண்டுமானால் மகாபலிபுரம் வரை நாம் நீட்டிக்கலாம். முதலிலே சென்னையைப் பொறுத்திருக்கிற நெருக்கடியைத் தீர்ப்பதற்கான இந்த வழிகளை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைப்பற்றித்தான் இப்போது நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.